**கமு/கமு/அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை - சாய்ந்தமருது**

# இரண்டாந் தவணைக் கணிப்பீடு - 2024

| தரம் 5 | தமிழ்மொழி | புள்ளிகள் |
|---|---|---|
| | வகுப்பு | நேரம்: 1.30 மணி | |
| சுட்டெண்/பெயர்: | | |

**எல்லா வினாக்களுக்கு இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.**

01) சிறுவர்கள் சிலர் ஓரிடத்திலே விளையாடிக் கொண்டிருந்தார்கள்.அவ் வழியில் வந்த தமிழ் புலவர் ஒருவர் அச்சிறுவர்களைப் பார்த்து 'இவ்வூரில் வதியும் வில்லவராய முதலியாரின் இல்லம் எங்குள்ளது' எனக் கேட்டார். அப்பொழுது அச்சிறுவர்களில் ஒருவன் **"பொன் பூச்சொரியும் பொலிந்த செழுந் தாதிறைக்கும்...."** எனத் தொடங்கி பாடலால் அதற்கு விடை கூறினான்.அதனைக் கேட்ட புலவர் திகைத்தார்.சிறுவனை ஏற இறங்கப் பார்த்தார்; மகிழ்ச்சியால் அவனைப் பாராட்டினார்.

- பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்குக.
  1) விளையாடிக் கொண்டிருந்தவர்கள் யாவர்?...............................................................................
  2) தமிழ்ப்புலவர் சிறுவர்களிடம் யாருடைய வீட்டினைப்பற்றி விசாரித்தார்?.............................................
  3) சிறுவனின் பதிலால் மகிழ்ந்த புலவர் சிறுவனை யாது செய்தார்?.......................................................
  4) 'பாடல்களை இயற்றுபவர்' என்னும் தொடர் குறிக்கும் தனிச்சொல்லை எழுதுக?......................................
  5) சிறுவன் பாடிய பாடல் வரியில் இடம்பெறும் பெயரடைமொழியை எழுதுக?..............................................
  6) பந்தியில் இடம்பெறும் இணைமொழியை எழுதுக?.........................................................................

(6x2=12 புள்ளிகள்)

## 02) வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்பில் இருந்து தெரிந்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

1. வயலில் பெண்கள் ..........................................................(களை/கலை) பிடுங்கினர்.
2. சிறுவர்கள் கடற்கரையில் ................................................(ஊறி/ஊரி) பிடித்து விளையாடினர்.
3. மரத்தினை அரிவதற்கு.......................................................(வாள்/வால்) பயன்படுத்தப்படும்.
4. மழை வெள்ளம் எங்கும் ..................................................(பரவிச்/பறவிச்) சென்றது.
5. எல்லாத் தொழில்களை விடவும் ......................................(உலவுத்/உழவுத்) தொழிலே சிறந்தது.

(5x2=10புள்ளிகள்)

## 03). பிரித்தெழுதுக.

1. தேனீர் = ..........+...........
2. முன்னூறு =..........+...........
3. தேங்காய் = ..........+...........
4. தேங்குழல் = ..........+...........
5. வெந்நீர் = ..........+...........

(1x5=5புள்ளிகள்)

**04). கீழ்வரும் கருத்தினை புலப்படுத்தும் மரபுத்தொடரை தெரிவு செய்து எழுதுக.**

1. அறிவுண்டாதல் ……………………………………………………………………………
2. உற்சாகப்படுத்தல் ……………………………………………………………………………
3. ஆசைப்படுத்தல் ……………………………………………………………………………
4. குற்றத்தை மறைக்கப் பார்த்தல்……………………………………………………………………
5. வெட்கமடைதல் ……………………………………………………………………………

(தலை கவிழ்தல், வாயூறுதல், கண்திறத்தல், தட்டிக்கொடுத்தல், பூசிமெழுகுதல்)

(5x2=10புள்ளிகள்)

**05). கீழ்வரும் இணைமொழிகளைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு பூர்த்தி செய்க.**

1. குப்பை ……………
2. மலையும்…………...
3. நீட்டி………………..
4. மூலை……………...
5. ஓட்டமும்……………
6. பாலுந்………………
7. பேரும்………………
8. குன்றும்……………...
9. அருமை……………..
10. கரடு………………...

**(மடுவம், குழியும், முரடு, நிமிர்ந்து, நடையும், புகழும், கூளம், பெருமை, முடுக்கு, தேனும்)**

(1x10=10புள்ளிகள்)

**06). குழம்பிக் கிடக்கும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்குக.**

1. ஒருவராக / நின்றனர் /பின் / சிறுவர்கள் /அணிவகுத்து /ஒருவர்.

…………………………………………………………………………………………………

2. இரு / வீதியின் /நின்றன /நிழல் / பக்கங்களிலும் /மரங்கள் /தரும்.

…………………………………………………………………………………………………

3. சிலர் / நேரத்தில் /விளையாடினார்கள் /ஒருநாள் /ஓரிடத்திலே /மாலை /சிறுவர்கள்.

…………………………………………………………………………………………………

4. பயன்படுகிறது / மேற்பட்ட /மருந்தாகப் / தேன் /நோய்களுக்கு /நூற்றுக்கு.

…………………………………………………………………………………………………

5. மரத்திலிருந்து / தோட்டத்தில் /விழுந்தது / தென்னை /உள்ள /தேங்காய்.

…………………………………………………………………………………………………

(5x2=10புள்ளிகள்)

**07) பின்வரும் பழமொழிகளுக்கு பொருத்தமான கருத்தை எழுதுக.**

1. இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை …………………………………………
2. உண்ணாச் சொத்து மண்ணாப் போகும் …………………………………………
3. குப்பையில் கிடந்தாலும் குன்றிமணி மங்காது …………………………………………
4. அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம் …………………………………………..
5. இளங்கன்று பயமறியாது. …………………………………………..

(வாலிபத்துணிவு, நற்புகழ் மங்குவதில்லை, திருப்திப்படாத மனம், உலோபம் கூடாது, உத்தம நட்பு)

(5x2=10புள்ளிகள்)

## 08). குறியீடுகளுக்கு பொருத்தமான கருத்தினை இணைக்குக

- மந்தை அல்லது வேறு விலங்குகள் முன்னால் பாதையைக் கடக்கக்கூடும்.
- மீள்சுழற்சிக்கு உட்படுத்தக் கூடிய கண்ணாடி.
- மீள்சுழற்சிக்கு உட்படுத்தக் கூடிய அலுமினியம்.
- பொருள் தண்ணீரில் நனையாமல் பார்த்துக் கொள்ளவும்.










(4x2=8புள்ளிகள்)

## 09) பின்வரும் தொடர்பை அவதானித்து விடையை எழுதுக.

1. குதிரை கனைக்கும் என்பது போல நரி.......................................................................................
2. திறப்புக்குகோர்வை என்பது போல புகையிலைக்கு.........................................................................
3. மானின் ஆண் கலை எனின் பெண்.............................................................................................
4. குரங்கு குட்டி எனின் கீரி.......................................................................................................
5. பலாவுக்கு சுளை எனின் கற்றாளை............................................................................................

(1x5=5புள்ளிகள்)

## 10). கீழுள்ள பந்தியை நன்கு வாசித்து விபரக் கோவையைப் பூர்த்தி செய்க.

கோகுலம் ஆரம்பப் பாடசாலையின் மாணவனான பிரதீபன் கெட்டிக்காரச்சிறுவன். பத்து வயதுடைய அவன் ஐந்தாந் தரத்தில் கல்வி கற்கிறான். அவனுக்கு சாருமதி என்னும் சகோதரியும் ஆனந்தன் என்னும் சகோதரனும் உள்ளனர். காந்தன் என்னும் பெயருடைய அவனின் அப்பா கணக்காளராக பணிபுரிகின்றார். சாந்தி என்னும் பெயருடைய அவனது அம்மா ஆசிரியையாக பணிபுரிகிறார்.

1. முழுப்பெயர் :
2. முதலெழுத்துக்களுடன் பெயர்:
3. வயது:
4. தந்தையின் தொழில்:
5. தாயின் பெயர்:
6. குடும்பத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கை:

(1x6=6புள்ளிகள்)

**11). பின்வரும் ஒவ்வொரு வாக்கியங்களுக்கு பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.**

1. சங்கர் தனது தாயைப் பார்த்து நாளைக்கு பாடசாலைக்கு வருவீர்கள்தானே எனக் கேட்டான்
2. எவ்வளவு பெரிய சிலை
3. கிராமங்கள் அழகானவையா

(1x4=4புள்ளிகள்)

**12). பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் ( ✓ )எனவும் பிழையாயின்(x) எனவும் எதிரே உள்ள அடைப்புக் குறிக்குள் அடையாளமிடுக.**

1. மான் கூட்டம் சிதறி ஓடின. (...........)
2. இரவு வானை நட்சத்திரங்கள் அலங்கரித்தன. (...........)
3. புத்தகத்தில் பல ஓவியங்கள் காணப்பட்டது. (...........)
4. அவையிரண்டும் தத்தம் இருப்பிடம் நோக்கிச் சென்றன. (...........)

(1x4=4புள்ளிகள்)

**10). "நாம் பாடப்புத்தகங்களைப் படிப்பது மட்டும் போதாது; விளையாடவும் வேண்டும்" என்ற தலைப்பில் கருத்துள்ள மூன்று வாக்கியங்களை எழுதுக.**

(ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும்.எழுவாய்,பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்)

1. ..............................................................................................................

..............................................................................................................

2. ..............................................................................................................

..............................................................................................................

3. ..............................................................................................................

..............................................................................................................

(6 புள்ளிகள்)